ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2360/22 - 2023 නොවැම්බර් මස 27 වැනි සඳුදා - 2023.11.27

2360/22 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பீ. 19/78* (VII)

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின்கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ,<br>
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்<br>
அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,<br>
*2023*, நவெம்பர் *23*.

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்குவிதிகள், *2023* ஆம் ஆண்டின் *3* ஆம் இலக்க, சமாதான நீதவான்கள் (நியமனம், இடைநிறுத்துகை, இல்லாதாக்குகை மற்றும் நடத்தைக் கோவை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* சமாதான நீதவானொருவராக நியமிக்கப்படத் தகவுடையவராகுவதற்கு, ஆளொருவர் :

(அ) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) முப்பது வயதுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும் ;

(இ) நற்பண்புடையவராக, ஐயத்துக்கிடமற்ற நேர்மையுடையவராக மற்றும் உள்ளூர் சமூகத்தின் அல்லது நாட்டின் மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) அரசகரும மொழிகளுள் ஏதேனுமொன்றைச் சரளமாகக் கதைப்பதற்கு, வாசிப்பதற்கு மற்றும் எழுதுவதற்கு இயலுமானவராக இருத்தல் வேண்டும் ;

(உ) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் எத்தவறுக்கான குற்றப்பணமானது காலத்துக்குக்காலம் வேறுபடக்கூடியவாறாக பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதிருத்தல் வேண்டுமோ அத்தவறொன்று தவிர்ந்த ஏதேனும் குற்றவியல் குற்றச்சாட்டுக்காக ஏதேனும் சட்ட நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிராதவராக இருத்தல் வேண்டும் ;

(ஊ) வங்கி முறிந்தவரொருவராக இருத்தலாகாது ;

(எ) சமூகத்துக்குச் சிறந்த சேவையாற்றியுள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(ஏ) உடல் மற்றும் உளரீதியில் ஆரோக்கியமானவராக இருத்தல் வேண்டும் ;

(ஐ) க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்துள்ளவராக இருத்தல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும், ஆளொருவர், க. பொ. த. உயர்தரத்தில் மூன்று சித்திகளைக் கொண்டிராத அல்லது மொத்தமாக க. பொ. த. உயர்தரத் தகைமைகளைக் கொண்டிராத சூழ்நிலைகளில், அத்தகைய ஆள் குறித்தவொரு துறையில் பெற்றுக்கொண்ட குறித்தவொரு திறன் அல்லது அனுபவம் தொடர்பில் சமூகத்துக்காற்றிய அவரது உன்னதமான சேவையைக் கருத்திற்கொண்டு சமாதான நீதவானொருவராக நியமிக்கப்பட அத்தகைய ஆள் பொருத்தமானவரென அமைச்சர் அபிப்பிராயப்படின், அதற்கான காரணங்களை எழுத்தில் வழங்கி அவ்வாளை அமைச்சர் நியமிக்கலாம் ; அத்துடன்

(ஒ) எந்த ஆளொருவரின் சமாதான நீதவான் எனும் முந்தைய நியமனம் இல்லாதாக்கப்பட்டிருந்ததோ அல்லது முடிவுறுத்தப்பட்டிருந்ததோ அந்த ஆளொருவராக இல்லாதிருத்தல் வேண்டும்.

3. சமாதான நீதவானொருவராக நியமிக்கப்படத் தகவுடைய ஆளொருவர் அதற்கான அவரது எழுத்திலான விண்ணப்பத்தை அமைச்சருக்கு அனுப்பலாம். அமைச்சர், முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், இவ்வொழுங்கு விதிகளுக்கிணங்க தகைமைபெற்ற எவரேனுமாளை சமாதான நீதவானொருவராக இருப்பதற்கென நியமிக்கலாம்.

4. சமாதான நீதவானொருவராக நியமிக்கப்பட்ட ஆளொருவர், பதவி விலகுகை, இறப்பு அல்லது அமைச்சரினால் அவரது நியமனம் இடைநிறுத்தப்படுதல் அல்லது இல்லாதாக்கப்படுதல் ஆகியவற்றின் மூலம் அவரது பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, அவரது ஆயுள் முழுவதும் சமாதான நீதவான் எனும் பதவியை வகிக்கலாம்.

5. செயலாளர், பின்வரும் விபரங்கள் உள்ளடங்கும் வகையில் சமாதான நீதவான்கள் பற்றிய இடப்பரப்பொன்றைப் பேணுதல் வேண்டும் :-

(அ) முழுப்பெயர் ;

(ஆ) பிறந்த திகதி ;

(இ) தேசிய அடையாள அட்டை இலக்கம் ;

(ஈ) வதிவிட முகவரியும் தொலைபேசி இலக்கங்களும் (கையடக்கத் தொலைபேசி மற்றும் நிலையான தொலைபேசி இணைப்பு) ;

(உ) நியமனத் திகதி, பதிவிலக்கம் மற்றும் நியாயாதிக்கம் ;

(ஊ) 8 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி ஏற்புடையற்பாலதாகுமிடத்து, சமாதான நீதவான் என்ற பதவியின் பதவி விலகுதல், இடைநிறுத்துதல், இல்லாதாக்குதல் அல்லது முடிவுறுத்தல் திகதி ;

(எ) இறப்பு.

6. (1) ஒவ்வொரு சமாதான நீதவானும், 5 ஆம் ஒழுங்குவிதியின் கீழான இடாப்பை இற்றைப்படுத்தும் நோக்கத்துக்காக, பொருளளவில் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலானதும் இயைபான கிராம அலுவலரினாலும் பிரதேச செயலாளரினாலும் சான்றுப்படுத்துப்பட்டதுமான உயிர்வாழ்தல் பற்றிய சான்றிதழொன்றை ஒவ்வோர் இரண்டாண்டுகளுக்கொரு முறை மாச்சு மாதம் முப்பத்தோராம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும், இவ்வொழுங்குவிதிகள் வலுவுக்கு வரும் திகதிக்கு முன்னர் சமாதான நீதவானாக நியமிக்கப்'பட்டுள்ள ஒவ்வோராளும் இவ்வொழுங்கு விதிகள் வலுவுக்கு வந்த திகதியிலிருந்து ஓராண்டுக்குள், இயைபான கிராம அலுவலரினாலும் பிரதேச செயலாளரினாலும் சான்றுப்படுத்தப்பட்ட உயிர்வாழ்தல் பற்றிய சான்றிதழொன்றைச் செயலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) அமைச்சரினால் நியாயமானதெனக் கருதப்பட்ட ஏதுக்கள் தவிர்ந்த வேறு ஏதுக்களுக்காக அத்தகைய உயிர்வாழ்தல் பற்றிய சான்றிதழைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற ஒவ்வொரு சமாதான நீதவானும், அத்தகைய உயிர்வாழ்தல் பற்றிய சான்றிதழ் கொடுக்கப்படுவதற்கான இறுதித் திகதியிலிருந்து பயனுறும் வகையில் சமாதான நீதவான் என்ற பதவியிலிருந்து பதவி விலகியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

7. ஒவ்வொரு சமாதான நீதவானும் இவ்வொழுங்கு விதிகளுக்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட சமாதான நீதவான்களுக்கான நடத்தைக் கோவையின் ஏற்பாடுகளைக் கடைப்பிடித்தொழுக வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்யத் தவறியமைக்கான எண்பிப்பானது அளிக்கப்பட்ட பதவிக்கான துர்நடத்தைச் செயலொன்றாதல் வேண்டுமென்பதுடன் அமைச்சரினால் அவரது கைப்பட எழுதிய எழுத்திலான அறிவித்தலொன்றின் மூலம் சமாதான நீதவான் பதவியிலிருந்து அகற்றப்படுவதற்குப் பொறுப்புடையதாதலும் வேண்டும்.

8. ஆளொருவர் :-

(அ) நியமனத் திகதியிலிருந்து மூன்று மாதங்களக்குள் பதவிக்கான சத்தியத்தைச் செய்யத் தவறுகின்றவிடத்து ;

(ஆ) அவரது நியமனம் தொடர்பிலான எவையேனும் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து ;

(இ) ஏதேனும் குற்றவியல் குற்றச்சாட்டின் மீது ஏதேனும் சட்ட நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுமிடத்து ;

(ஈ) சட்ட நீதிமன்றமொன்றினால் வங்கி முறிந்த ஒருவராக வெளிப்படுத்தப்படுமிடத்து ;

(உ) பதவிக்கான பணிகளை நிறைவேற்றுவதற்கு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் இயலாதவராக இருப்பதாகக் கண்டறியப்படுமிடத்து ;

(ஊ) அவரது அதிகாரத்தைத் துர்ப்பிரயோகம் செய்த குற்றவாளியாகக் கண்டறியப்படுமிடத்து ; அல்லது

(எ) 7 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட சமாதான நீதவான்களுக்கான நடத்தைக் கோவையின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுவதன் மூலமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாகக் கண்டறியப்படுமிடத்து,

அமைச்சர், சமாதான நீதவான் எனும் நியமனமொன்றை இல்லாதாக்கலாம்.

9. சமாதான நீதவான் பதவியொன்றுக்கான நியமனத்தை இல்லாதாக்குவதற்கான நடவடிக்கை முறை பின்வருமாறாக இருத்தல் வேண்டும் :

(அ) செயலாளர், சமாதான நீதவானொருவர் 8 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலை அல்லது மீறுகையைப் புரிந்துள்ளார் எனும் ஏதேனும் தகவலை, முறைப்பாட்டை அல்லது சார்த்துதலைப் பெற்றதன்மேல், அவர், சார்த்துதல் செய்யப்பட்ட செயலை அல்லது மீறுகையைச் சூழ்ந்துள்ள எல்லாச் சூழ்நிலைகளும் பற்றிய விசாரணையொன்று மேற்கொள்ளப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும் ;

(ஆ) பந்தி (அ) இன் கீழான விசாரணையொன்று நடாத்தப்படவுள்ளவிடத்து, அமைச்சர், அத்தகைய விசாரணை முடிவடையும் வரை சமாதான நீதவான் பதவியை வகிப்பதிலிருந்து அத்தகைய ஆளை இடைநிறுத்தலாம் ;

(இ) பந்தி (அ) இன் கீழான விசாரணையின் முடிவுகளைப் பெற்றதன்மேல், செயலாளர், அம்முடிவுகளையும் அவரது விதப்புரைகளையும் அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும். அமைச்சர், செயலாளரின் விதப்புரைகளையும் முடிவுகளையும் கவனத்திற்கொண்டு முடிபொன்றை எடுத்தல் வேண்டும்.

10. இவ்வொழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய :

"செயலாளர்" என்பது, நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினது செயலாளர் எனப் பொருள்படும் என்பதுடன், அத்தகைய செயலாளரினால் எந்த மேலதிக செயலாளருக்குத் தத்துவம் எழுத்தில் கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் மேலதிக செயலாளரையும் உள்ளடக்குகின்றது ;

"அமைச்சர்" என்பது, நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்.

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 6)

உயிர்வாழ்தல் பற்றிய சான்றிதழ்

...................... (ஆண்டு)

சமாதான நீதவான் (நியமனம், இடைநிறுத்துகை, இல்லாதாக்குகை மற்றும் நடத்தைக் கோவை) ஒழுங்குவிதிகள்

சமாதான நீதவான்களுக்கான அறிவுறுத்தல்கள் :

1. பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட இச்சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகளில் இச்சான்றிதழ் காலாவதியாகும்.

2. தயவுசெய்து இப்படிவத்தை முழுமையாகப் பூர்த்திசெய்யவும்.

3. கையொப்பங்களும் பதவி முத்திரைகளும் முழுமையாக இடப்பட்டுள்ளனவா என்பதை தயவுசெய்து உறுதிப்படுத்தவும், அவ்வாறின்றேல், சான்றிதழ் நிராகரிக்கப்படும்.

4. தேஅஅ/ கடவுச்சீட்டு என்பவற்றில் ஏதேனும் மாற்றமிருப்பின், இயைபான பிரதிகள் இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

5. இச்சான்றிதழை இரண்டாண்டுக்கு ஒரு முறை மாச்சு மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கத் தவறினால், 6(2) ஆம் ஒழுங்குவிதிக்கமைய சமாதான நீதவான் பதவியிலிருந்து பதவி விலகியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

**1. பதவி பற்றிய தகவல்கள்:**

1.1 பதிவிலக்கம் :.......................................................................................................................................

1.2 நியமனத் திகதி :.......................................................................................................................................

1.3 நியாயாதிக்கம் :.......................................................................................................................................

**2. தனிப்பட்ட தகவல்கள்:**

2.1 முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :.......................................................................................................................

2.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :...........................................................................................................

2.3 உங்கள் பெயர் மாற்றப்பட்டுள்ளதா ? : ஆம்/இல்லை ஆம் எனில்,

2.3.1 முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :.......................................................................................................

2.3.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :..........................................................................................

2.4 பிறந்த திகதி :.......................................................................................................................................

2.5 நிரந்தர முகவரி :.......................................................................................................................................

2.6 தற்காலிக முகவரி, ஏதேனுமிருப்பின் :.......................................................................................................

2.7 தொடர்புகொள்வதற்கான விபரங்கள் :.......................................................................................................

2.7.1 கைத்தொலைபேசி :............................................................ மாவட்டம் :.............................................

2.7.2 மின்னஞ்சல் :.......................................................................................................................................

**3. ஆளடையாளம் பற்றிய விபரங்கள்**

3.1 இலங்கையருக்கான தேஅஅ இல. :..............................................................................................................................

3.2 பிரசாவுரிமை அட்டை இல. :..................................................................................................................................

3.3 கடவுச்சீட்டு இல. (ஏதேனுமிருப்பின்) :...................................................................................................................

| கடவுச்சீட்டு இல. | வழங்கப்பட்ட திகதி | காலாவதியாகும் திகதி | வழங்கிய நாடு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**4. வெளிப்படுத்துகை**

மேலேயுள்ள தகவல்கள் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையும் சரியானவையுமாகும் என்று நான் இத்தால் வெளிப்படுத்துவதுடன், அவசியமான ஆவணங்களின் பிரதிகளையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

.........................................................., ........................................................
சமாதான நீதவானின் கையொப்பம். திகதி

**5. சான்றுப்படுத்துகை**

5.1 ............................................................ எனும் பதிவிலக்கத்தின் கீழ் சமாதான நீதவான் பதவியை வகிப்பவரான திரு./ திருமதி/ திருவாட்டி/ வணக்கத்துக்குரிய/ கலாநிதி ............................................................... என்பவரை நான் கண்டுள்ளேன் என்றும், அத்துடன் இத்திகதியில் அவர்/அவள் உயிர் வாழ்கின்றார் என்றும், அவர் முதற்தோற்றத்தில் பதவிக்கான பணிகளை நிறைவேற்றுவதற்கான உடல் ரீதியானதும் உள ரீதியானதுமான தகுதியைக் கொண்டுள்ளவராகக் காணப்படுகின்றார் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

......................................................., ........................................................
கிராம அலுவலரின் கையொப்பம். பதவி முத்திரை

திகதி :............................................

5.2 சான்றுப்படுத்துகை பற்றிய பிரதேச செயலாளரின் புறக்குறிப்பிடுகை

இத்திகதியில், சொல்லப்பட்ட சமாதான நீதவான் உயிரோடு உள்ளாரென்பதை நான் கண்டுள்ளேன் என்றும், அவர் முதற்தோற்றத்தில் அவரது பதவிக்கான பணிகளை நிறைவேற்றுவதற்கான உடல் ரீதியானதும் உள ரீதியானதுமான தகுதியைக் கொண்டுள்ளவராகக் காணப்படுகின்றார் என்பது பற்றிய கிராம அலுவலரின் மேலுள்ள சான்றுப்படுத்துகையை நான் புறக்குறிப்பிடுகின்றேன்.

............................................................, ........................................................
பிரதேச செயலாளரின் கையொப்பம். பதவி முத்திரை

திகதி :............................................

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 7)

சமாதான நீதவான்களுக்கான நடத்தைக் கோவை

சமாதான நீதவான்களுக்கிடையே உயர் தரத்திலான தார்மீக மற்றும் ஒழுக்கவியல் நடத்தையை ஊக்குவித்தல் மற்றும் ஊழல் செயல்முறைகளுக்கான வாய்ப்புக்களை இல்லாதொழித்தல் என்பவற்றின் மூலம் வினைத்திறனான நீதி நிருவாகத்தை வலுவுக்கிடுதல் என்பது இந்த நடத்தைக் கோவையின் குறிக்கோளாகும்.

**1. சேவைக்கான அணுகல்**

சமாதான நீதவானொருவர் வினயத்துடனும், கௌரவத்துடனும், மரியாதையுடனும் சமாதான நீதவானொருவரின் சேவைகளை வழங்குதல் வேண்டுமென்பதுடன் சேவைகளுக்கான கோரிக்கைகளை உரிய காலத்தில் கையாளுதல் வேண்டும் ; அத்துடன் அவர் சமாதான நீதவானொருவரின் சேவைகளை வழங்குவதற்கு நியாயமற்ற முறையில் மறுத்தலுமாகாது.

**2. கடமைகளும் பணிகளும்**

2.1 ஒவ்வொரு சமாதான நீதவானும் :-

(i) பின்வரும் நிபந்தனைகளுக்கிணங்க, ஆவணங்களை அத்தாட்சிப்படுத்துதல் மற்றும் மெய்யென்றுறுதிப்படுத்துதல் தொடர்பில் பொது மக்களுக்குச் சேவையாற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) அவர் கையொப்பமிடுகின்ற ஆவணத்தில் முதலெழுத்துக்களுடனான முழுப்பெயர், கையொப்பம் மற்றும் திகதி என்பவற்றுடன் சேர்த்து அவரது பதிவிலக்கத்தையும் தெளிவாகப் பதிவுசெய்தல் வேண்டும் ;

(ஆ) மூலப்பிரதி காண்பிக்கப்பட்டு அது பரிசோதிக்கப்பட்டு ஆவணத்தில் கையொப்பமிடும் ஆளின் ஆளடையாளத்துடன் திருப்தியடைந்தாலன்றி, அவர் ஆவணமொன்றை ஒருபோதும் சான்றுப் படுத்துதலாகாது ;

(இ) சமாதான நீதவானொருவரின் முன்னிலையில் வெளிப்படுத்துகையொன்று அல்லது சாதனமொன்று கையொப்பமிடப்பட அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டுமென்று தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, அது தனது முன்னிலையில் நிறைவேற்றப்படுகின்றது என்பதை சமாதான நீதவான் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) அவரது அறிவுக்கெட்டியவரை எந்த ஆவணங்களில் அல்லது சத்தியக்கடதாசிகளில் மோசடியான அல்லது பிழையான தகவல்கள் உள்ளடங்கியிருக்கின்றனவோ அந்த எவையேனும் ஆவணங்களை அல்லது சத்தியக் கடதாசிகளைச் சாட்சிப்படுத்துதல், அத்தாட்சிப்படுத்துதல், வெளிப்படுத்துகை செய்தல் அல்லது கையொப்பமிடுதல் ஆகாது.

(ii) சமாதான நீதவானொருவர் என்ற வகையில் சட்ட ஆலோசனைகளை வழங்குதலாகாது ;

(iii) இலங்கையில் வலுவிலுள்ள சட்டங்களை, அதிலும் குறிப்பாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம், (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைக் கோவை, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டம், (23 ஆம் அத்தியாயமான) சத்தியம் மற்றும் உறுதியுரைக் கட்டளைச் சட்டம் மற்றும் (24 ஆம் அத்தியாயமான) சத்தியக்கடதாசிகள் கட்டளைச் சட்டம் என்பவற்றுக்குத் தன்னைப் பரிச்சயப்படுத்திக்கொள்ள முயற்சித்தல் வேண்டும்.

2.2 சமாதான நீதவானொருவர் அவரது பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதில் -

(i) பதவிக்கான சத்தியத்துக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் ;

(ii) சேவைகளை வழங்குவதற்காகக் கட்டணமொன்றை விதித்தலோ அல்லது ஏதேனும் அன்பளிப்பை ஏற்றுக்கொள்ளுதலோ ஆகாது ;

(iii) அவரது இயலுமைக்கெட்டியவரை தொழில்வாண்மை ரீதியிலும், நியாயமாகவும், விழிப்புக் கவனத்துடனும் மற்றும் துரிதமாகவும் செயலாற்றுதல் வேண்டும் ;

(iv) நேர்மையுடனும் சுயாதீனமாகவும் செயலாற்றுதல் வேண்டும் ;

(v) நாணயமற்ற அல்லது சட்டமுரணான செயற்பாடுகளில் ஈடுபடுதலாகாது ;

(vi) சமாதான நீதவான் என்ற பதவியை அவமரியாதைக்கு அல்லது பகிரங்க நகைப்புக்கு உட்படுத்தக்கூடிய அல்லது பகிரங்க அவதூறை விளைவிக்கக்கூடிய சாத்தியங்கொண்டதாக மலினப்படுத்தும் வகையிலான அத்தகைய முறையில் நடந்து கொள்ளுதலாகாது ;

(vii) முறையீனமான தன்மையை அல்லது முறையீனமான தன்மையாகத் தோன்றுகின்றவற்றைத் தவிர்த்தல் ;

(viii) எல்லா நேரங்களிலும் பொதுமக்கள் நலனுக்காகச் செயலாற்றுதலும் அத்துடன் சமாதான நீதவானின் சேவைகளை வழங்கும்போது சுயாதீனமாகவும் பக்கச்சார்பின்றியும் இருத்தலும் வேண்டும் ;

(ix) சமாதான நீதவான் என்றவகையில் அவர் எக்கருமத்தில் கரிசனைப்படுகின்றாரோ அக்கருமம் எதிலும் அக்கறை முரண்பாடொன்றுக்கு இட்டுச்செல்லும் சாத்தியமுள்ள ஏதேனும் அக்கறையை அல்லது உறவுநிலையை வெளிப்படுத்துதல் ;

(x) சமாதான நீதவான் ஒரு தனிப்பட்ட, குடும்ப ரீதியிலான, நிதி ரீதியிலான அல்லது தொழில் ரீதியிலான அக்கறையொன்றைக் கொண்டுள்ளவிடத்து, அவர் அத்தகைய கருமங்கள் மீதான சேவைகளை வழங்குவதற்கு மறுத்தல் வேண்டும் ;

(xi) ஏதேனும் தொழிலில், வர்த்தக ரீதியிலான அல்லது தனிப்பட்ட கொடுக்கல் வாங்கலில் அல்லது பிணக்கில் அவரது சொந்த அக்கறைகளை முன்கொணர்வதற்கான அல்லது முன்கொணர்வதாகத் தோன்றுகின்றமைக்கான ஏதேனும் விசேட அதிகாரத்தை அவர் கொண்டுள்ளாரெனக் கோருவதற்கு அல்லது உணர்த்துவதற்கு சமாதான நீதவான் எனும் பதவிப்பெயரைப் பயன்படுத்துதலாகாது ;

(xii) வயது, பால் நிலை, இனம், நிறம், சமயம், கலாசாரம், சமூக வகுப்பு, மொழி, உளரீதியான அல்லது உடல் ரீதியான இயலுமை அல்லது அரசியல் அபிப்பிராயம் என்பவற்றைப் பொருட்படுத்தாமல், பதவியின் கௌரவத்துடன் முரண்படாது அமைதியானதும் நாகரிகமானதுமான முறையில் செயலாற்றுதல் வேண்டும் ;

(xiii) சமாதான நீதவானொருவர் என்ற அவரது பதவியின் பயனைக்கொண்டு அவர் அறிந்துகொள்கின்ற தகவல்களின் இரகசியத் தன்மையையும், தகவல்களின் அந்தரங்கத் தன்மையையும் மற்றும் எவரேனும் தனிநபர் பற்றிய விபரங்களையும் பாதுகாத்தல் வேண்டுமென்பதுடன் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டாற்றவிர அத்தகைய தகவல்களை வெளிப்படுத்துதலும் ஆகாது ; அத்துடன்

(xiv) சமாதான நீதவான் எனும் பதவிப்பெயரைப் பயன்படுத்தி தனிப்பட்ட நன்மைகளை ஈட்டிக்கொள்வதற்கென எவையேனும் கழகங்களில் இணைந்துகொள்ளுதல் அல்லது அத்தகைய கழகங்களை உருவாக்குதல் ஆகாது.

**3. பதவி முத்திரை/கடிதத் தலைப்பு**

சமாதான நீதவானொருவர் அவரது பதவி முத்திரையிலும் மற்றும் கடிதத் தலைப்பிலும், அது வன்பிரதியாக இருந்தாலுஞ்சரி அல்லது இலத்திரனியல் படிவமாக இருந்தாலுஞ்சரி, அவரது பதிவிலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் அரசாங்க இலச்சினையைப் பயன்படுத்துதலுமாகாது.

**4. பெயர்ப் பலகைகள்**

சமாதான நீதவானின் சேவைகளைப் புரிவதற்கு இயலுமானவராகவுள்ளார் என்பதை விளம்பரப்படுத்துவதற்கென, விடயத்துக்கேற்ப, வன்பிரதியாக இருந்தாலுஞ்சரி அல்லது இலத்திரனியல் படிவமாக இருந்தாலுஞ்சரி, தொழில் அட்டையொன்றில் அல்லது கடிதத் தலைப்பொன்றில் அவரது/அவளது பெயருக்குப் பின்னர் பதவித் தலைப்பைப் பயன்படுத்துதல் உட்பட, அவரது அலுவலகத்தில் அல்லது வதிவிடத்தில் சமாதான நீதவான் எனும் பதவிப்பெயரை வெளிக்காட்டி வைக்கலாம்.

**5. அறிவிப்புக் கொடுத்தல்**

(அ) சமாதான நீதவானொருவர், பின்வரும் மாற்றங்களுள் ஏதேனுமிருப்பின் அத்தகைய மாற்றம் பற்றி செயல்முறைக்குகந்தவரை விரைவாக செயலாளருக்கு எழுத்திலான அறிவிப்பைக் கொடுத்தல் வேண்டும் :-

(i) சமாதான நீதவானின் பெயரில் ஏற்படும் மாற்றம் ;

(ii) வதிவிட முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கத்தில் ஏற்படும் மாற்றம்.

(ஆ) எல்லா சமாதான நீதவான்களும், அவர்களின் இறப்புப் பற்றி செயல்முறைக்குகந்தவரை விரைவாக இயைபான கிராம அலுவலருக்கூடாக செயலாளருக்கு எழுத்தில் அறிவிக்கும்படி அவர்களது நெருங்கிய குடும்பத்தினருக்கு அறியக்கொடுத்திருத்தல் வேண்டும்.

EOG *11-0317*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.